## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – **"அனேகன்"** தமிழ் திரைப்படத்திற்கு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

**அரசாணை (டி) எண்.80**

**நாள்: 20.02.2015**
**ஜய, மாசி 8,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.61, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 9.2.2015.
2. திருவாளர்.ஏஜிஸ் என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரின் 18.2.2015–ஆம் நாளிட்ட கடிதம்.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண். சட்டக்குழு IV/2374/2015, நாள் 20.2.2015.

-----

**ஆணை:–**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 12.01.2015 முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டிருந்த காலத்தில், தேர்தல் ஆணையம் வழங்கிய இசைவின் அடிப்படையில், திரைப்படத்தினை பார்வையிட்ட தேர்வுக்குழுவின் அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச்சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களில் திரையிடப்படும் **"அனேகன்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. தற்போது, திருவாளர். ஏஜிஸ் என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் முடிவடைந்த நிலையில் **"அனேகன்"** திரைப்படத்திற்கு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் கேளிக்கை வரி விலக்களிக்குமாறும், ஏற்கனவே வெளியிடப்பட்ட 09.02.2015 நாளிட்ட அரசாணைக்கு திருத்தம் வெளியிடுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

3. திருவாளர். ஏஜிஎஸ் என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரின் கோரிக்கையினை ஏற்கலாம் என முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் பார்வை மூன்றில் கண்ட கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார். திருவாளர். ஏஜிஎஸ் என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் 13.02.2015 அன்று நடைபெற்று 16.02.2015 அன்று முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் அவர்களின் பரிந்துரையினை ஏற்று திருவாளர். ஏஜிஎஸ் என்டர்டைன்மென்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் கோரியுள்ளபடி, திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் வெளியிடப்படும் **"அனேகன்"** தமிழ் திரைப்படத்திற்கு, இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல், கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ் வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
பொது (தேர்தல்-III) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/2/2015

பிரிவு அலுவலர்.

20/2/15